Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 68

திங்கட்கிழமை
02 பெப்ரவரி 2026

தை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மூன்று வாகனங்கள் விபத்து

கிளிநொச்சி, பெப்.2
மாங்குளம், செல்வபுரத்தில் நேற்று மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த மூவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட் »11

# மாகாணசபைத் தேர்தல் இந்த ஆண்டு நடக்காது!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, பெப்ரவரி 2
மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவது சாத்தியமற்றது. ஆயினும் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். »11

## தப்பியோடிய டிப்பர் மீது பொலிஸ் துப்பாக்கிச்சூடு

### தருமபுரத்தில் சம்பவம்



கிளிநொச்சி, பெப்.2
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சமிக்ஞையை மீறிப் பயணித்த டிப்பர் வாகனம் மீது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் டிப்பர் வாகனத்தின் எரிபொருள் தாங்கி மற்றும் ரயர் »11

## அவசரகாலச்சட்டம் மீண்டும் நீடிப்பு

கொழும்பு, பெப்.2
பொது அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவின் பேரில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள் »11

## இலங்கைக்கு ரூ.400 கோடி தாராளம்காட்டியது இந்தியா

கொழும்பு, பெப்.2
இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் 2026-27 நிதியாண்டிற்கான மத்திய வரவு - செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்துள்ளார்.
இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை' கொள்கையின் அடிப்படை »11

## வடக்கு வந்தது ரி-20 கிண்ணம்




யாழ்ப்பாணம், பெப்.2
2026 ஆண்டு ரி-20 உலகக் கிண்ணத்துக்கான வெற்றிக் கிண்ணம் நேற்று யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டது.
உத்தியோகபூர்வ பயணத் திட்டத்தின்படி, நேற்று அதிகாலை தம்புள்ளையிலிருந்து புறப்பட்ட கிண்ணம் தாங்கிய ஊர்தி, மிஹிந் »11

## அரசியற்கைதிகளை உடன் விடுவிக்குக!

### யாழ்ப்பாணத்தில் போராட்டம்

விரிவு பக்கம்:-02

## பஸ் கட்டணங்களை அதிகரிக்க நேரிடும்

### இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2
பஸ் கட்டணங்களை எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்தன தெரிவித் »11

## 'கிவுல் ஓயா'வுக்கு எதிராக இன்று பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.2
தமிழர்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கில் மகாவலி அதிகாரசபையால் முன்னெடுக்கப்படும் கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வவுனியா வடக்கில், நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
காலை 10 மணியளவில் நெடுங்கேணி பஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடும் போராட்டக்காரர்கள், அங்கிருந்து பேரணியாகச் சென்று நெடுங்கேணி பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதுடன், மனுவொன்றையும் கையளிக்கவுள்ளனர்.
இந்தப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, ஸ்ரீ ரெலோ உள்ளிட்ட »11



## மழை நீடிக்கும்

யாழ்ப்பாணம், பெப்.2
வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளில் தற்போது கிடைத்துவரும் மழை நாளைமறுதினம் வரை நீடிக்கும் வாய்ப்புள்ளது என்று எதிர்வு »11

முச்சந்தி முரளி
" நடக்கும் ஆனால் நடக்காது
எண்டு இப்பிடியே உந்தத்
தேர்தலை இவையும்
இழுத்தடிக்கப்போயினம்
கண்டியளோ"

## கரிநாள் பேரணியில் அனைவரும் இணைக

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.2
சுதந்திர தினத்துக்கு எதிராக வடக்கு-கிழக்கில் நடைபெறவுள்ள கரிநாள் பேரணியில் அனைத்துத் தரப்புக்களும் பங்கேற்று வலுச் சேர்க்க வேண்டும்- என யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் அழைப்பு »11

## உணவுதவிர்ப்பில் ஈடுபட்ட அனைவரும் சிகிச்சையில்

கொழும்பு, பெப்.2
கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகச் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, எஞ்சியிருந்த பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தரும் நேற்று இரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆறு »11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கொவிசெத
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4334
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 46 50 55 65
விசேட எழுத்து: O

### ஹந்தஹண ராசி சுப பலன்
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1401
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 09 19 43 56

### NLB ஜய
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0360
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 1 7 7 9

### மெகா பவர்
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2440
ஆங்கில எழுத்து: Q
சுப்பர் இலக்கம்: 19
வெற்றி இலக்கங்கள்: 25 47 52 65

### மஹஜன சம்பத
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6092
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 1 9 3 2 4 4

### தன நிதானய
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2122
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 16 42 46 56
விசேட எழுத்து: F

### சுப தவசக்
திகதி: 01.02.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0208
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 23 32 39

# அரசியற்கைதிகளை உடன் விடுவிக்குக!

## யாழ்ப்பாணத்தில் போராட்டம்

**யாழ்ப்பாணம், பெப். 2**

**1996ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, யாழ்ப் பாணத்தில் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில், அந்த அமைப்பின் ஒருங்கிணைப் பாளர் கோமகன் தலைமை யில், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தில் 'நீதிக்கான சாட்சி' என்ற தொனிப்பொருளில் இந் தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி கைதுசெய் யப்பட்டு, 31ஆவது ஆண்டாக சிறையில் வாடும் அரசியற் கைதியொருவரின் சிறை வாழ்வை வெளிப்படுத்தும் வகையிலேயே இந்தப் போராட் டம் இடம்பெற்றது.

அரசியற்கைதிகளின் உறவு கள், வேலன் சுவாமிகள், அரசியல் ஆய்வாளர் ஜோதி லிங்கம், காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்ட னர். (ம-27)

### சுபிரி தன சம்பத
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0800
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கம்: 1 0 6 3 1 7

### Super Ball DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3066
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கம்: 24 39 69 75

### சனிதா DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 08 25 30 50
வெற்றி வாரம்: 5227

### SASIRI DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 0896
வெற்றி இலக்கம்: 25 41 43

### லக்ன ராசி DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
மகரம்
வெற்றி இலக்கம்: 12 19 37 41
சீட்டிழுப்பு வாரம்: 4778

### KAPRUKA DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 34
வெற்றி இலக்கம்: 25 32 57 74
வெற்றி வாரம்: 2242

### அத கோடிபதி DLB
திகதி: 01.02.2026 தினம்: ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கம்: 09 28 35 71
வெற்றி வாரம்: 2892

# பொது இடங்களில் குப்பை; இனி உடன் நடவடிக்கை!

## *பருத்தித்துறை நகரசபை அதிரடி*

யாழ்ப்பாணம், பெப். 2

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவோரைக் கண் காணிப்புக் கமரா மூலம் அவதானித்து நடவடிக்கை எடுக்கப்படுமென, பருத்தித்துறை நகரசபை அறிவித்துள் ளது. தூய்மையான நகராக பருத்தித்துறை நகரைப் பேணும் செயற்றிட்டத்துக்கு அமைவாகவே இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நகர பிதா வின்சென் டி போல் டக்ளஸ் போல் தெரிவித்ததாவது-

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட இடங் களில் திண்மக்கழிவகற்றல் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகிறது. பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் முறைப்பாடுகள், தகவல்களை உள் வாங்கி எம்மிடம் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி மிகவும் வினைத்திறனான முறையில் இந்தச் செயற் பாட்டை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், நகரின் பல்வேறு பகுதிகளில் அத்துமீறிய வகையில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டவேண்டாம் என்று உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டபோதிலும், மக் கள் அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாகச் செயற்படு வது வேதனையான விடயம். எனவே சம்பந்தப்பட்ட இடங் கள் தற்போது சி.சி.ரி.வி. கமராக்கள் ஊடாகக் கண்காணிக் கப்படுகின்றன. இனிவரும் காலங்களில் குப்பைகளைக் கொட்டுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (ம-100)

## கிளிநொச்சி
# தருமபுரத்தில் நேற்று விசேட சுற்றிவளைப்பு

கிளிநொச்சி, பெப். 2

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில், பொலிஸாரும் இரா ணுவத்தினரும் இணைந்து நேற்று விசேட வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போதைப்பொருள்களைப் பயன்படுத்தி விட்டு வாகனங்களைச் செலுத்தும் நபர்கள், நீதிமன்றங்களால் பிடி யாணை பிறப்பிக்கப்பட்டோர் உள்ளிட் டோரைக் கைதுசெய்யும் வகை யிலேயே, இந்த வீதிச்சோதனைகள் இடம்பெற்றன. (ம-113)



**போதைப்பொருள் ஒழிப்பு;**
# மூன்று மாதங்களில் 83,000 பேர் கைது!

கொழும்பு, பெப். 2

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படும், போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தின்கீழ், 3 மாதங்களில் 83 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், தற்போ தைய அரசாங்கம் விசேட திட்டமொன்றைக் கடந்த மூன்று மாதங்களாக நடைமுறைப்படுத்தி வருகின் றது. 'முழு நாடும் ஒன்றாக' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழேயே, இதுவரை 83 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று மாத காலப் பகுதியில் 2 ஆயிரத்து 300 கிலோ கஞ்சா, 508 கிலோ ஹெரோய்ன், 11 கிலோ கொக்ஹெய்ன் உள் ளிட்ட பல்வேறு போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பாரதூரமான குற்றவா ளிகளும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர். (ம)

# பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் ஒருங்கிணைப்புக்குழுவில் அதிருப்தி

யாழ்ப்பாணம், பெப். 2

போக்குவரத்துக் கடமையில் ஈடுபடுகின்ற பொலி ஸாரின் சர்ச்சைக்குரிய செயற்பாடுகள் தொடர்பில், வலிகாமம் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அதிருப்தி வெளியிடப்பட்டது. வலிகாமம் மேற்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபவானந்தராஜா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது, இரவு வேளைகளில் சாரதிகளின் கண்களில் வெளிச்சத்தைப் பாய்ச்சி வாகனங்களை நிறுத்தும் செயற்பாடுகளில் பொலிஸார் ஈடுபடுகின்றனர் என்றும், இருட்டில் மறைந்திருந்து கள்வர்களைப் பிடிப்பதுபோல பொலிஸார் நடந்துகொள்கின்றனர் எனவும் பொது மகன் ஒருவர் குற்றஞ்சாட்டினார். இதற்குப் பதிலளித்த ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தெரிவித்ததாவது-

போக்குவரத்துப் பொலிஸார் இவ்வாறான செயற்பாடு களில் ஈடுபடுவதை நானும் அவதானித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்கு எடுத்துரைத்துக் கொண்டு செல்லப்படும்-என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசின் புதிய வரித்திருத்தத்தால் தேங்காய்எண்ணெய் விலை உயரும்

## தரமற்ற எண்ணெய் வகைகள் ஊடுருவும் ஆபத்து!

**யாழ்ப்பாணம், பெப்.2**

**இலங்கை அரசாங்கத்தின் புதிய வரித்திருத்தக்கொள்கையின் அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரிக்கக்கூடும் என நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய பிரசாரத்தின் தலைவர் ரஞ்சித் விதனகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் வரி மாற்றத்தினால் தேங்காய் எண்ணெயின் விலை உயரும், அதேவேளை பாம் ஒயில் போன்ற இறக்குமதி எண்ணெய்களின் விலை குறையும் நிலை ஏற்படும்.

தேங்காய் சார்ந்த பொருள்கள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதால், உள்நாட்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி குறைவடைந்துள்ளதும் ஒரு காரணமாகும்.

தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பதனால், மக்கள் மலிவான பாம் ஒயில் மற்றும் தீங்கு விளைவிக்கக்கூடிய ஏனைய வகை எண்ணெய்களை நாடும் நிலை ஏற்படும்.

அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் தரமற்ற எண்ணெய்களைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து விற்கும் மோசடிகள் சந்தையில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இலங்கை மக்களின் தனித்துவமான உணவு முறைகளில் தேங்காய் எண்ணெய் இன்றியமையாத ஒன்றாக உள்ள நிலையில், இந்த விலையுயர்வு நுகர்வோரை மிக மோசமாகப் பாதிக்கும். புதிய வரித்திருத்தம் காரணமாகப் பொதுமக்களின் ஆரோக்கியம் கேள்விக்குறியாவதைத் தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)




## இலங்கை பொலிஸ் சேவையில் 8 அதிகாரிகள் திடீர் இடமாற்றம்

கொழும்பு, பெப்.2

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 8 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், ஐந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொலிஸ் சேவையில் 32,000 வெற்றிடங்கள்

கொழும்பு, பெப்.2

இலங்கை பொலிஸ் சேவையில் தற்போது சுமார் 32,000 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள ஆளணிப் பற்றாக்குறைக்கு மத்தியில் எதிர்வரும் ஆண்டுகளில் பெருமளவிலான அதிகாரிகள் ஓய்வுபெறவுள்ளனர். இந்தாண்டில் 2,500 பொலிஸ் அதிகாரிகள் ஓய்வுபெறவுள்ளனர். இந்த இக்கட்டான சூழலைச் சமாளிக்கும் வகையில் முதற்கட்டமாக 10,000 புதிய அதிகாரிகளைப் பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



**உணவுத் தவிர்ப்புப் போராட்டம்;**

## அபிவிருத்தி அலுவலர்களை சந்தித்தார் சஜித் பிரேமதாஸ

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவி நிலைகளை ஒழுங்குபடுத்துமாறு வலியுறுத்தி, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவோரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்குதல், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிநிலைகளை முறையாக ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, இந்த உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெறுகின்றது. போராட்டத்தின் 6ஆம் நாளான நேற்றுமுன்தினம் அவர்களை சஜித் பிரேமதாஸ சந்தித்தார். (ம)

## விவசாயிகளுக்காக 'காப்புறுதி மாதம்'

கொழும்பு, பெப். 2

2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைக்குவரும் வகையில் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின்கீழ் உள்ள விவசாய காப்புறுதிச்சபையால் விவசாயிகளுக்காக 'காப்புறுதி மாதம்' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. நெல், மக்காச்சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சோயா அவரை, மிளகாய் உள்ளிட்ட அனைத்துப் பயிர்களுக்கும் வறட்சி, வெள்ளம், காட்டு யானைகள், பூச்சித்தாக்கம், தீவிபத்துகள், நோய்கள் மற்றும் பீடைகளினால் ஏற்படும் அனைத்துச் சேதங்களுக்கும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும். இதுதொடர்பான விபரங்களை விவசாயக் காப்புறுதிச்சபையின் தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## உதுதான் உவையின்ர 'காவல்'!

கொடுமை கொடுமை எண்டு கோயிலுக்குப் போனால் அங்க, கொடுமை கொலுசு கட்டி கும்மாங்குத்து ஆடிச்சாம். அதைமாதிரித்தான், இப்ப பொலிஸிட்ட முறைப்பாடு செய்யிற ஆக்களின்ர நிலையுமிருக்குது. கிட்டடியில வட்டுக்கோட்டையில ஏ.எல். படிக்கிற ஒரு பொம்பிளைப் பிள்ளை ரியூசனுக்குப் போட்டு பொழுதுபடுற நேரமா திரும்பி வந்திருக்கிறா. அவா வாறவழியில போதைப்பொருள் பாவிச்சுப்போட்டு நிண்ட நாலைஞ்சு 'கொசப்புகள்' அந்தப் பிள்ளையோட சேட்டை விட்டிருக்கினம். இப்பிடிச் சேட்டை விடுற கொசப்புகளிட்ட இருந்து எப்பிடித் தப்பிறது எண்டு தெரியாமல் அந்தப் பிள்ளை முழுசிக்கொண்டு நிண்டிருக்குது. அதால போனவையள் அந்தப் பிள்ளையளைப் பாத்திட்டு, சேட்டை விட்டுக்கொண்டிருந்த கொசப்புகளிட்ட போனால், அவங்கள் "கதைச்சியெண்டால் அடி விழும் ஓடு அங்கால" எண்டு கலைச்சிருக்கிறாங்கள். இதைப் பார்த்து மனம் பொறுக்காமல் ஒருத்தர் வட்டுக்கோட்டைப் பொலிஸுக்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லியிருக்கிறார். போனை எடுத்துக் கதைச்சது அந்தப் பொலிஸ் ஸ்ரேசன்ர பொறுப்பதிகாரி. "உடன ஆக்களை அனுப்பிறன்"எண்டு பொறுப்பதிகாரி சொல்லி கனநேரமாகியும் ஒரு பொலிஸ்சுவட அங்காலிப் பக்கம் எட்டியும் பாக்கேலை.

திரும்பவும் அந்தப் பொதுமகன் பொறுப்பதிகாரிக்கு கோல் எடுத்திருக்கிறார். "ஐயா, இன்னும் ஒருத்தரும் வரேலை, இஞ்ச இவங்கள் அந்தப் பிள்ளையோட இன்னும் சேட்டை விட்டுக்கொண்டிருக்கிறாங்கள்" எண்டு சொன்னதும் பொறுப்பதிகாரி "ஃபீல்டில நிக்கிற பொலிஸ்காரரின்ர நம்பரைத்தாறன், அவைக்கு அடிச்சு இடத்தைச் சொல்லுங்கோ. அடுத்த நிமிசமே அவை அங்க நிப்பினம்" எண்டு ஒரு போன் நம்பரையும் குடுத்திருக்கிறார். அவரும் அந்த நம்பருக்குக் கோல் எடுக்க "நீங்க முதல்ல பொலிஸ் ஸ்ரேசனுக்கு நேரபோய் என்ட்ரியைப் போடுங்கோ. அதுக்குப் பிறகுதான் நாங்கள் வருவம்" எண்டு சொல்லிப்போட்டு போனை வைச்சிட்டார். அங்க ஒரு பொம்பிளைப் பிள்ளை பயந்து நடுங்கிக்கொண்டிருக்கு, றோட்டில போதைக் கொசப்புகள் அட்டகாசம் செய்துகொண்டிருக்குதுகள், இந்த நேரத்தில அந்த மனுசன் பொலிஸ் ஸ்ரேசனுக்கு நேரபோய் முறைப்பாடு எழுதிக் குடுத்து, பொலிஸ்காரர் ஆடிப்பாடி வந்து சேருறதுக்குள்ள, ஏதும் அசம்பாவிதம் கூட நடந்துமுடிஞ்சிடுமே! அதுக்குப் பிறகு வந்து பொலிஸ் காரர் என்னத்தைச் செய்யப்போகினம்?

பிறகு பொலிஸ் அவசரப் பிரிவு நம்பருக்கும் அவர் போன் பண்ணிப் பார்த்தும் ஒரு பிரியோசனமுமில்லை. கடைசியில அந்த மனுசன், சேட்டை விட்டுக்கொண்டிருந்த கொசப்புகளிட்டப் போய் கெஞ்சிக்கூத்தாடி, தூசணத்தால பேச்சும் வாங்கித்தான் அந்தப் பிள்ளையை மீட்டுவிட்டவராம். அதுமட்டும் பொலிஸ்காரரின்ர தலைக்கறுப்புக் கூட அந்தப் பக்கத்தில எத்துப்படேலை. இந்தமுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில இந்த விசயத்தைக் கேட்டு சனம் வெளுத்து வாங்க, அதுக்கு பொலிஸ்காரர் குடுத்த விளக்கம் வேற லெவல். "எங்கட ஸ்ரேசனில ஆக்கள் பற்றாக்குறை. அந்த நேரத்தில நாங்கள் அராலி கிழக்கில நிண்டம், அதாலதான் வரேலாமல் போட்டுது" எண்டு அவை சொன்ன நொண்டிச்சாட்டைக் கேட்டு சனத்துக்கு அழுகிறதோ, சிரிக்கிறதோ எண்டு தெரியாமல் போட்டுது. அராலியில இருந்து வட்டுக்கோட்டைக்குப் போக நாலைஞ்சு மணித்தியாலமோ பிடிக்கும்? அஞ்சு நிமிசத்தில பாஞ்சுவரக்கூடிய தூரம் தான். ஆக்கள் பற்றாக்குறை எண்டால், றோட்டில ஹெல்மெட் போடாதவனையும், லைசென்ஸ் இல்லாதவனையும் மறிச்சு 'தண்டம்' அடிக்க மட்டும் எப்பிடி ஒருபெரும் பட்டாளமே வந்து நிக்குது? சனத்துக்கு ஒரு ஆபத்து எண்டால் சாட்டுச் சொல்லுறதும், காசு வாற காரியம் எண்டால் விழுந்தடிச்சு ஓடி வாறதும் தான் இப்பத்தைய பொலிஸ் சேவையோ? பொறுப்பதிகாரியின்ர பேச்சையே கேக்காத பொலிஸ்காரர் இருக்கிற இடத்தில சனத்துக்கு மட்டும் என்ன பாதுகாப்பு இருக்கப் போகுது?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் தைமாதப் பிரதோஷ விரத உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-41-66)

# வாகனங்களின் பாதுகாப்பு சந்தைகளில் கேள்விக்குறி

## மக்கள் கவலை

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொதுச்சந்தைகளுக்குள் நிறுத்தப்படும் வாகனங்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனவும், முறையற்ற விதத்தில் கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தைக்குள் வாகனத்தை நிறுத்தும்போது எவ்வித பாதுகாப்புச்சீட்டும் வழங்கப்படுவதில்லை. ஆனால், வாகனத்தை வெளியே எடுத்துச்செல்லும்போது மட்டும் கட்டணம் அறவிடப்படுகிறது.

இதனால் வாகனத்தின் பாதுகாப்புக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாத நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வாகனம் உள்ளே நுழையும்போதே முறையான சீட்டு வழங்கப்பட்டால் மட்டுமே வாகனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தமுடியும். ஆனால் வெளியேறும் போது மட்டும் பணம் வசூலிப்பது வெறும் கட்டண அறவீடாகவே உள்ளதே தவிர, பாதுகாப்புச் சேவையாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்துத் தம்மால் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொதுச்சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள், வாகனப்பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நிலையை உள்ளூராட்சி மன்றங்கள் உறுதிப்படுத்தவேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-9)



## சுற்றுலாச் சாரதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜன.31

சுற்றுலாப் பயணிகளுக்கு நட்புறவான சேவையை வழங்கும் முகமாக வடமராட்சிப் பகுதியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட ஓட்டோ மற்றும் கார்ச்சாரதிகளுக்குச் சான்றிதழ், அடையாள அட்டை, ரீ-சேர்ட் என்பன வழங்கிவைக்கும் நிகழ்வு பருத்தித்துறை நகரசபையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நகரசபை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. (ச-100)




மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் 2026ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திருமதி க.அம்பிகைபாகன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்கள் வழங்கலும் நடைபெற்றது. (ச-41-9)

# சுழிபுரம் விக்டோரியாவில் சின்னம் சூட்டல் நிகழ்வு!

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டல் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கல்லூரியின் முதல்வர் சுலபாமதி தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது. (ச-27)



# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்துசேரும். சிலருக்குத் தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை


# ஏட்டில் எழுதப்பட்ட ஊதியம்...!

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட்டுள்ளது என ஒருபோதும் கருதமுடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டைமான். ஊதிய அதிகரிப்பு என்பது ஒருவரின் வேலைக்கான ஊதியத்தை அதிகரிப்பதே அன்றி, வேலையை அதிகரித்து ஊதியத்தை வழங்குவது எனப் பொருளாகாது என்பது ஜீவன் தொண்டைமானின் வாதம். அதாவது, ஒரு நாளில் 15 கிலோ கொழுந்து கொய்வதற்கு ஆயிரத்து 500 ரூபா ஊதியத்தை வழங்கினால், அதே 15 கிலோ கொழுந்துக்கு இரண்டாயிரம் ரூபாவை வழங்குவதுதான் ஊதிய அதிகரிப்பாக இருக்குமே தவிர, 'இரண்டாயிரம் ரூபா தருகின்றேன் 20 கிலோ கொழுந்து கொய்யுங்கள்' எனக் கூறுவது ஊதிய உயர்வு அல்ல. ஆனால், மலையக மக்களின் விடயத்தில் இன்று பெருமளவு பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த அணுகுமுறையைத்தான் கைக்கொள்கின்றன.

மலையக மக்களின் ஊதியப் பிரச்சினைகள் இன்று, நேற்றோ அல்லது இந்த வருடமோ கடந்த வருடமோ நிலவும் விவகாரம் அல்ல. இந்தத் தீவுக்கு அவர்கள் எப்போது அழைத்துவரப்பட்டனரோ, அப்போதிருந்தே இத்தகைய சுரண்டல்கள் ஆரம்பித்துவிட்டன. இதைத் தீர்ப்பதற்கு மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்கின்ற போதிலும், ஏதோவொரு குறுக்கீட்டை - முறையற்ற தலையீட்டைச் செலுத்துவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் தவறுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணிலின் காலத்தில், ஆயிரத்து 700 ரூபாவை அடிப்படை ஊதியமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை, பெருந்தோட்ட நிறுவனங்கள் மிலேச்சத்தனமாகக் கையாண்டதைப் பார்த்தோம். இதன் தொடர்ச்சியே தற்போது ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசிலும் இடம்பெற்று வருகின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் அபிலாஷைகளை நிவர்த்திசெய்யும் வகையில், அடிப்படை ஊதியம், வருகை ஊதியம் தொடர்பில் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புடன் முற்றுப்பெறக்கூடிய விடயமல்ல இது. இத்தகைய அறிவிப்புகளைக் கேட்டுக்கேட்டு மலையக மக்களின் காதுகள் புளித்துப் போய்விட்டன. சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, கோத்தாபய, ரணில் என எவரும் விதிவிலக்கு இல்லாத வகையில், மலையக மக்களின் ஊதியம் தொடர்பில் விதம் விதமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அறிவிப்பைச் செயற்படுத்தும் கட்டுப்பாட்டை அந்தந்த அரசுகளால் கைக்கொள்ள முடியவில்லை என்பதே துயரம். ஆதலால், இந்த விடயத்தில் 'தான் தனித்துவமானவர்' என்பதை ஜனாதிபதி அநுர நிரூபித்தாகவேண்டும்.

தோட்டத்தொழிலாளர்களாக இருக்கட்டும் -இதர மலையகத் தமிழர்களாக இருக்கட்டும் அவர்களும் இந்த நாட்டு மக்களே. அனைத்துவித உரிமைகளுடனும், ஜனநாயக அம்சங்களுடனும் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கு அவர்கள் உரித்துடையவர்கள். மலையக மக்களின் குருதியை அட்டைகள் மட்டும் உறிஞ்சவில்லை. மாறிமாறி ஆட்சிக்குவரும் அரசாங்கங்களும், மலையகத்தில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் கட்சிகளும், பெருந்தோட்ட நிறுவனங்களும்தான் போட்டிபோட்டு உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன.



## பொய்யாமொழி

**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வாய் எல்லாஞ் செயல்**

**பொருள்:** செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.




# அரசியலமைப்புப் பணி மிகவும் மந்தகதியில்



## அஜித் பி பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 2

**புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளில் ஸ்ரீலங்கா அரசாங்கம் அக்கறையற்றுச் செயற்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளில் ஈடுபடுவதாகக் கூறுகின்றபோதிலும், இதுவரை காத்திரமான வரைவுகள் எவையும் முன்வைக்கப்படவில்லை. இதையடுத்தே அரசாங்கத்தின் செயற்பாடுகள்மீது நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா அதிருப்தி வெளியிட்டுள்ளார். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கும், புதிய அரசியலமைப்பை உருவாக்கவும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் எண்ணக்கரு சமர்ப்பிக்கப்படும் எனக் கூறப்படுகின்றபோதிலும், அந்த அறிவித்தல் இதுவரை சாத்தியப்படவில்லை என்றும் அஜித் பி பெரேரா மேலும் கூறியுள்ளார். (ம)

## இலங்கை – சீனா புதிய விமானசேவை

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் புதிய விமானசேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
'கப்பிற்றல் எயார்லைன்ஸ்' என்ற விமான நிறுவனம், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் புதிய விமான சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருந்தது.
அந்த நிறுவனத்தின் முதலாவது விமானம் நேற்றுமுன்தினம் நண்பகல் இலங்கையில் தரையிறங்கியுள்ளது. (ம)



### கிளிநொச்சியில் கனமழை;

## இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறப்பு!

கிளிநொச்சி, பெப். 2

கிளிநொச்சியில் நிலவிவரும் கனமழையுடனான காலநிலை காரணமாக, இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் பகுதியளவில் திறக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் கடந்த சில நாள்களாக, மிதமானது தொடக்கம் கனமானது வரையான மழைப்பொழிவு பதிவாகி வருகின்றது. இரணைமடுக் குளத்துக்கான நீர்வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்தே, இரணைமடுக்குளத்தின் எட்டு வான்கதவுகளும் பகுதியளவில் திறக்கப்பட்டுள்ளன. (ம-113)



## திஸ்ஸ விகாரைக்கு எதிராக போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.2

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று ஞாயிற்றுக்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஒவ்வொரு பௌர்ணமி தினமும் விகாரைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பித்த போராட்டம் இரண்டாவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் கொட்டும் மழைக்கு மத்தியில் தொடர்ந்தது. (எ-இ)

**நாளை** செவ்வாய்க்கிழமை - தை 20
03.02.2026
சுபநேரம் : 11.05 – 12.35
ராகுகாலம் : 03.35 - 05.05



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### சிங்கி இறால்களுடன்
## இருவர் கைது

திரு.மலை, பெப்.2

மருதான பிரதேசத்தில் சிறிய அளவிலான சிங்கி இறால்களைப் பிடித்து வெளிநாட்டுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக சேமித்து வைத்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மீன்பிடி, நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பிடிக்கத் தடைசெய்யப்பட்ட இந்த சிங்கி இறால்கள் கைப்பற்றப்பட்டன.

(ச-இ)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 18 . 08 . 1963



மறைவு 03 . 01 . 2026

கடந்த (03.01.2026) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் குணரட்ணம் ஞானசேகரம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (02.02.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


புது வீதி, ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

(CS/60628) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 09 . 1962



மறைவு 31 . 01 . 2026

## வேலுப்பிள்ளை சோதிலிங்கம்

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சோதிலிங்கம் அவர்கள் கடந்த (31.01.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியரின் மருமகனும், இராசமலரின் பாசமிகு கணவரும், தர்மிளா (சுவீடன்), கோபிதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்பரசி (பிரான்ஸ்), பார்த்தீபன் (சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தமிழ்நிலா, தமிழ்நிஷா (சுவீடன்), இலான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனும், மகாதேவன், காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், மகேந்திரன், இராசரத்தினம் ஆகியோரின் அன்புக்குரிய சகோதரனும், விக்னேஸ்வரன், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், பரமேஸ்வரன், சகுந்தலாதேவி, செல்வரட்ணம், சிவஞானம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/60627) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 05 . 1947



மறைவு 30 . 01 . 2026

## சபாரத்தினம் சண்முகரட்ணம்


யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதியை பிறப்பிடமாகவும், கனடா Brampton, Ontario வை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சண்முகரட்ணம் அவர்கள் 30-01-2026 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்,நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா,நாகரத்தினம் தம்பதிகளின் மூத்த மருமகனும்,பூபதி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும்,பிரமிளா, பிரகாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தில்குமரன்(செந்தில்), ஷர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிராமி, கார்த்திகன், தினாஷ்,திரிஷா, அவனீதன், ஆதேஷ் , ஆதீஷன். ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற நடேசரட்ணம், விமலாதேவி, நகுலாதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, மற்றும் பஞ்சரட்ணம், சகுந்தலாதேவி, கிருஷ்ணரத்னம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கமலேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராஜா, காலம்சென்ற சோமசுந்தரம், குலசேகரம், நாகேஸ்வரி, காலம்சென்ற கந்தசாமி ,மதியாபரணம்,ஜெகதீஸ்வரன்,பரமேஸ்வரி,நாகராசா,விமலரணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.02.2026 புதன்கிழமை10:00 am St John's Dixie 737 Dundas Street East MISSISSAUGA, ON L4Y 2B5 என்னும் இடத்தில் நடைபெற்று தகனககிரியைகள் மதியம் 12 மணிக்கு, 737 Dundas Street East MISSISSAUGA, ON L4Y 2B5 வில் அமைந்துள்ள St John's Dixie தகனமையத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல்: குடும்பத்தினர்
பிரகாசன் – மகன் 0014168447482
பிரமிளா – மகள் 0016478650867
செந்தில்குமரன்- மருமகன் 0016475440181

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 01 . 1948



மறைவு 31 . 01 . 2026

## கணபதிப்பிள்ளை சிவநாதன்

அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சிவநாதன் (கைத்தொழில் பேட்டை உத்தியோகத்தர்) 31.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற கணபதிப்பிள்ளை சரஸ்வதி தம்பதியினரின் மூத்த புதல்வனும், காலம்சென்ற ஆறுமுகம் முத்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஞானமணியின் அன்பு கணவரும், விஜிதா (இலங்கை), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும், சித்திரேஸ்வரன் (இலங்னாக), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமானரும், கௌசல்யாதேவி (இலங்கை), சண்முகநாதன் (கனடா), செல்வக்காந்தன் (ஜேர்மன்), சுபத்திராதேவி (கனடா), சுசீலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலம்சென்ற ஞானசேகரம்பிள்ளை (இலங்கை) மற்றும் புனிதா (கனடா), காலம்சென்ற நளாயினி (ஜேர்மன்), சாம்பசிவம் (கனடா), காந்தராசா (கனடா), நவரத்தினம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தட்ஷாயினி (சுவிஸ்), சஞ்சீவன், துர்ஷிகா (கனடா), துஷாந், பிரசாந், சதர்சன், (கனடா), ஜனனி, நிராகுலன் (இலங்கை) ஆகியோரின் மாமனும், சுமுகன், புராதனி (கனடா), பவித்திரா, நிஷா (ஜேர்மன்), ஆகியோரின் பெரியப்பாவும், மிஷாளன், சதுர்த்திகன் (இலங்கை), திஷாண் (கனடா), திஸ்மியா (கனடா), தார்மியா (கனடா) ஆகியோரின் பேரனும், கலாவாணியின் உடன்பிறவா சகோதரனும் ஆவார். அன்னாயின் இறுதிக்கிரிகை 04/02/2026 புதன்கிழமை மு.ப 8 மணிக்கு அலரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவத்திலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவக்கிரி


தகவல்: குடும்பத்தினர்
விஜிதா : 077 978 9151
கவிதா : (647) 753 537 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா
15.02.2026

### கடைகளுக்கான இடங்கள் வழங்கல்

**15.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவின்போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு கடைகளுக்கான இடங்கள் 07.02.2026ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.**



கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலத்திற்கு உரிய நேரத்திற்கு சமூகம்தந்து தங்களின் கடைகளுக்கான இடங்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 077 3043339 / 076 1120272**


இலக்க தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளலாம்.

பங்குத்தந்தை,
புனித தோமையார் ஆலயம்,
மாதகல்.

(CS/60527A) J-1

## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல வருடாந்த திருவிழா
15.02.2026

**மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா 15.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. புனித லூர்து அன்னை வழியாக ஆண்டவன் அருளைப் பெற்று இறையுறவில் வளமுடன் வாழ பக்தர்களை அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.**



- ☆ 06.02.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையின் பின் கொடியேற்றத்துடன் திருப்பலி ஆரம்பமாகும்.
- ☆ தினமும் மாலை 04.45 மணிக்கு திருச்செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
- ☆ 14.02.2026ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புனித லூர்து அன்னையின் திருச்சொரூபத் தேர்ப்பவனியும், திருப்பலியும், நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.
- ☆ 15.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பங்குத்தந்தை,
பங்கு திரு அவை
(CS/60527A) J-1 புனித தோமையார் ஆலயம், மாதகல்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

### சீனித்தம்பி கமலநாதன்
திதி - பிரதமை



ஆண்டுகள் பத்தும் ஆனதோ அப்பா !!
ஆறிவிடும் துயரம் என நாம் நினைத்தோம் ஆறாது
இத்துயரம் என உணர்ந்தோம் அப்பா !
இன்பங்கள் இரட்டிப்பாகும்
துன்பங்கள் தூர விலகிப்போகும்
துணையாய் நீங்கள் இருந்தபோது அப்பா !
இல்லமது நீங்களின்றி இருட்டாயானது
விடியும் ஒவ்வொரு பொழுதும் உங்கள்
நினைவுகளுடனே கடந்துபோகிறது அப்பா !
எப்போதும் எமை காத்தருளும் காவல்தெய்வம்
நீங்கள் இப்போதும் பல சந்தர்ப்பங்களில் நாம் அதை
உணர்கிறோம் அப்பா !
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
அப்பா! அப்பா! அப்பா!

தோற்றம் 19.12.1939 — மறைவு 25.01.2016

குடும்பத்தினர்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# வெளிநாட்டு ஆசைகாட்டி மோசடி செய்தவர் கைது!

கொழும்பு, பெப்.2

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பணமோசடியில் ஈடுபட்ட ஒருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இராஜகிரிய பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வெளிநாட்டு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ கடிதத்தை ஒத்த போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பல்வேறு நபர்களை ஏமாற்றி பணமோசடி செய்துவந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர் இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடையவராவார். (ச-இ)

## மணமகள் தேவை

1. வட்டுக்கோட்டை. இந்து. கௌரவகுலம் (V). 1988. பூசம். Data Analysis, Australia Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. (45522)
2. K.K.S. இந்து. கௌரவகுலம் (V). 1993. விசாகம். Masters, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (43203)
3. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுஷம். Quantity Surveyor, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (34984)
4. நீர்வேலி - புலோலி. இந்து. கௌரவகுலம் (V). 1991. பூரட்டாதி. BSc, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (32143)
5. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1989. சித்திரை. Bachelors, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (41733)
6. கொக்குவில் - உடுவில். இந்து. கௌரவகுலம் (V). 1988. திருவோணம். Civil Engineer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. (52796)
7. வட்டுக்கோட்டை. இந்து. கௌரவகுலம் (V). 1992. விசாகம். CIMA Qualified, Canada Citizen. மணமகனுக்கு மணமகள் தேவை. (33308)
8. உரும்பிராய். இந்து. கௌரவகுலம். (V). 1988. கேட்டை. Travel and Tourisom Management, Divorce, Newzeland Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை.
9. வண்ணார்பண்ணை. இந்து. கௌரவகுலம். (V). 1987. சித்திரை. Masters, (MBA), Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.
10. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம். (V). 1994. ஆயிலியம். BSc in Computer Science, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. (34159)

**S.Sharma J.P** CALL: 077 189 0367
**www.thaalee.com** 077 539 3728

மருத்துவத் துறையில் உங்கள் எதிர்காலத்தை உறுதியாக கட்டியெழுப்புங்கள்!

## Evergreen
School of Health Science



01 தாதியர் கற்கைநெறி
02 பராமரிப்பாளர் கற்கைநெறி

மரியாதைக்குரிய, நிலையான மற்றும் அர்த்தமுள்ள மருத்துவத் தொழிலுக்கான முதல் படி.

கற்றுக்கொள்ளுங்கள் ; பராமரியுங்கள் ; வழிநடத்துங்கள் ; வெற்றிபெறுங்கள்



தாதியர் கற்கைநெறி (Diploma in Nursing)
Level - 4
1 வருட வகுப்புகள் +
3 மாத நடைமுறை பயிற்சி



பராமரிப்பாளர் கற்கைநெறி (Caregiver)
Level - 3
6 மாத வகுப்புகள் +
3 மாத நடைமுறை பயிற்சி

**தகுதிகள்**
O/L தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்
வயது: 18 - 35 ஆண்டுகள்
மருத்துவத் துறையில் ஆர்வம் மற்றும் மனித சேவைக்கான மனப்பாங்கு

### சிறப்பு இலவச நன்மைகள் மற்றும் பட்டறைப் பயிற்சிகள்



- முதலுதவி (First Aid) மற்றும் அவசர சிகிச்சை பட்டறை
- தலைமைத் திறன் மற்றும் தொழில்முறை மேம்பாட்டு பட்டறை
- மருத்துவ அதிகாரிகள் (Medical Officers) நடத்தும் சிறப்பு பட்டறைகள்
- மருத்துவமனை நடைமுறை பயிற்சிகள்
- அனுபவமுள்ள, தகுதி பெற்ற ஆசிரியர்கள்
- தொழில் வழிகாட்டல் மற்றும் மாணவர் ஆதரவு
- பாடநெறி முடிவில் சான்றிதழ்
- நட்பான மற்றும் ஆதரவான கல்விச் சூழல்
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற திறன்கள்

**இலவச பாடநெறி**
அடிப்படை ஆங்கில மொழிப் பாடநெறி
அடிப்படை கணினி பயிற்சி

மனித நேயத்துடன் சேவை செய்யும் தொழிலைத் தேர்ந்தெடுக்குங்கள்
நடைமுறை பயிற்சி ; நிபுணர் வழிகாட்டல் ; உறுதியான எதிர்காலம்

இல. 7, விநாசிதம்பி ஒழுங்கை, A9 வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.


இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
இடங்கள் வரையறுக்கப்பட்டவை!
074 304 1004, 074 298 0198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டு முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளால் உதவி




யாழ்ப்பாணம், பெப். 2
தமிழ்நாட்டில் முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களால் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக் களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
இலங்கை மதிப்பில் சுமார் 42 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த நிவாரண உதவிகள் மீள்குடியேற்றப்பட்ட இலங்கைச் சமூகத்தின் பிரதிநிதிகளால் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தில் கையளிக்கப்பட்டன. அவை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. (ச-35)



## அர்ப்பணிப்பாளர்கள் கிளி.யில் கௌரவிப்பு


*கிளி, பெப்.2*
*கிளிநொச்சி மாவட்டத்தில் டித்வா புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக மனிதநேய அடிப்படையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இராணுவத்தினரும், கிராம சேவையாளர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, கண்டாவளைப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் விசுவமடு 553 படைப் பிரிவு மாநாட்டு மண்பத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.*
*(ச-113)*



*நயினாதீவு பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலய மஹா கும்பாபி ஷேகப் பெருவிழா கடந்த வெள்ளிக் கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது.*
*(ச-41-66-17)*

**வேலைவாய்ப்பு வெற்றிடம்**
எமது அலுவலகத்திற்கு அலுவலக
எழுதுனர் தேவை.
ஆர்வமுடையோர்
சுயவிபரத்தினை கீழ்க்காணும்
இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்
Whatsapp:-
077 238 0196
(CS/31128) J-1

## துயர் பகிர்கிறோம்



**கிருஸ்ணசாமி கண்ணதாசன் (கண்ணன்)**

**தோற்றம்** 21.11.1967 **மறைவு** 26.01.2026

ஆழ்வார் ஒழுங்கை, ஓடக்கரை,
பருத்தித்துறையை பிறப்பிடமாகவும்
சுவிஸ்லாந்து, சூரிச், நகரினை வசிப்பிடமாகவும்
கொண்ட கிருஸ்ணசாமி கண்ணதாசன்
அவர்கள் கடந்த (26.01.2026) திங்கட்கிழமை
இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.
திருமதி கிருஸ்ணசாமி தம்பதியரின்
அன்பு மகன் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று
(02.02.2026) திங்கட்கிழமை சுவிஸ்லாந்து
நேரப்படி காலை 09.00- 11.00 மணி வரை
நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரர் - தங்கவேலாயுதம்**
**077 956 0953**

## மரண அறிவித்தல்

**மலர்வு** 03 . 08 . 1954



**உதிர்வு** 30 . 01 . 2026

**சாந்தினி பத்மநாதன்**

அச்செழு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் போயிட்டி அச்செழு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தினி பத்மநாதன் அவர்கள் கடந்த (30.01.2026) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாள்ஸ் எடிநைற் - லில்லி புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், சதீஸ், லோறன்ஸ், நிருத்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷேலின்மேனகா, பபிதா, கணேசலிங்கம், ஆகியோரின் மாமியாரும், ஷரேன் ஜெருஷா, கிருத்திக், தர்சித் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற யோகராஜா நைற், வசந்தினி, சரோஜினி, சுபேந்தினி, செரின் சுகந்தினி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஞானமிர்தம் மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற ஆனந்தராசா, மற்றும் அமிர்தராணி, சண்முகமூர்த்தி ஆகியேரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (03-02-2026) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடும்ப சேமக்காலையான விலங்கன் கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**074 017 3400**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும், அம்மன் மகளிர் இல்லத்துக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் கடந்த புதன்கிழமை உதவிகள் வழங்கப்பட்டன. (க-66)



திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் கைலாசவாகன உற்சவம் கடந்த புதன்கிழமை இரவு பக்திபூர்வமாக நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கைலாசவாகனத்தில், விநாயகப் பெருமானும், சிவலிங்கப் பெருமானும் வீதி உலா வந்ததுடன், கண்கவர் வாண வேடிக்கைகளும் நிகழ்த்தப்பட்டன. (க-66)



மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் புதிதாக இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா வித்தியாலய அதிபர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-41-9)



சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-41-9)



மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புதிதாக இணைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-41-9)





மன்னார் வலயத்தின் 2026ஆம் ஆண்டுக்கான கால்கோள் விழா, பேசாலை சென்.மேரிஸ் பெண்கள் வித்தியாலயத்தில் வித்தியாலய முதல்வர் திருமதி ஜே.எஸ். விவியன் பீரிஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (க-56)



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் கால்கோள் விழாவில், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர் மற்றும் சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க)



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கால்கோள் விழா அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-17)



புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா உப அதிபர் அ. மதன்ராஜ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டல் தாவரங்கள் நாச்சிக்குடாவில் நடுகை



கிளிநொச்சி, பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை இயற்கைப் பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கில், மெசிடோ நிறுவனத்தினால் கண்டல் தாவரங்கள் நடுகை செய்யும் செயற்றிட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப் பட்டது. இந்த நடுகை நிகழ்வில் மெசிடோ நிறுவனப் பணியாளர் களுடன் இணைந்து, அப்பகுதி மீனவர் சங்கத்தினர் மற்றும் கடற்றொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

(ச-55)





## நன்றி நவிலல்



பிறப்பு 26.01.1940 — இறப்பு 01.01.2026

திருமதி
**பாலபரமேஸ்வரி சண்முகராஜா**


அம்மாவின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உணவு வழங்கியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும், அந்தியேட்டி கிரியைகள், சபிண்டீகரண கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

*என்றும் நினைவில்*

**குடும்பத்தினர்.**

(CR 46985)A

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சூசைப்பிள்ளை வேதநாயகம்**

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 1:21

ஆண்டுகள் பத்தொன்பது ஆனதுவோ!
மாண்புடன் எம்மையீந்து மண்ணில்
புகழுடன் எம்மை வாழ வைத்து
பாசத்தின் இருப்பிடமாய் இருந்து
சிறந்த வழிகாட்டியாய் எம்மை
நல்வழியில் வாழ வழிநடத்திய எம்
அன்பு அப்பாவே!


என்றும் உங்கள் அன்பான நினைவுகளுடன்

தோற்றம் 08.02.1942 — மறைவு 02.02.2007

மகன்
வே.சுரேந்திரகுமார் (சுரேஸ்)

# மரண அறிவித்தல்

## பவுலினா யோகராணி சமத்தர் (யோகம்)



பிறப்பு: 30.06.1949 — இறப்பு: 23.01.2026

யாழ்ப்பாணம் சுண்டிக்குழியைப் பிறப்பிடமாகவும் ஒட்டகப்புலத்தை வாழ்விடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவுலினா யோகராணி சமத்தர் (யோகம்) கடந்த 23.01.2026 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி ஜேம்ஸ் குணறெட்ணம் சமத்தர் (றோயல் வைத்தியசாலை -வெள்ளவத்தை) அவர்களின் அன்பும் அர்ப்பணிப்பும் நிறைந்த மனைவியும் காலஞ்சென்ற மு.வி. ஆசீர்வாதம் (ஆசிரியர் உரிமையாளர் ஆசீர்வாதம் அச்சகம் புத்தகசாலை யாழ்ப்பாணம்) றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா சமத்தர் (பிரபல முறிவு நோவு வைத்தியர்) தங்கராசம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சசீலா (லண்டன்) தனுஜா (லண்டன்) ஜோயல் சமத்தர் (மேக்கூறி இன் உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றிஷோன், ஷனோன், லஷான், அஷ்வின், சங்கீத், ஸ்ருதி, ஸ்ரெஃபான், டிவான் ஆகியோரின் பாசமுள்ள பேத்தியும், காலஞ்சென்ற ஜெயராஜா ஆசீர்வாதம் (ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) பேரின்பராணி சூசைப்பிள்ளை (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பொன்ராணி யேசுதாசன் (அவுஸ்திரேலியா), ஆனந்தராணி மகாதேவன் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், றொஹான் யோசவ் (பொறியியலாளர் -லண்டன்), டினேஷ் அலோசியஸ் (வைத்தியர்- லண்டன்), நொறின் சியாந்தி சமத்தர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற அன்ரனி, நேசறெட்ணம் (முறிவு நோவு வைத்தியர்), திருமதி மேரி லோறன்ஸ் (லண்டன்), காலஞ்சென்ற நீக்கிலஸ், கனகறெட்ணம் (ஜெய்ப்பூர் -யாழ்ப்பாணம்), திருமதி நவமணி அமலதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமுள்ள மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் 05.02.2026 அன்று காலை 9.0 மணியளவில் (லண்டன் நேரம்) இல.1, ஹேபேட் வீதியில் அமைந்துள்ள புனித அகுஸ்தீனார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு WIDNEY MANOR சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறை வேண்டல் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : ஜோயல் சமத்தர் (மகன்)**
**(உரிமையாளர் மேக்குறி இன்- கண்டி வீதி, யாழ்ப்பாணம்)**
**தொடர்பு:076 2752067**

| | |
|---|---|
| விக்ரறின் சசிலா ஜோசப் (மகள்) | - +447752267842 |
| அஞ்சலினா தனுஜா அலோசியஸ் (மகள்) | - +447957502921 |
| றொஹான் ஜோசப் (மருமகன்) | - +447877885378 |
| Dr.டினேஷ் அலோசியஸ் (மருமகன்) | - +447737826655 |
| நொறின் சியாந்தி சமத்தர் (மருமகள்) | - +94760946486 |

(CS 31129) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலின் தாக்குதலில் 29 பொதுமக்கள் சாவு

### காஸாவில் சோகம்

காஸா, பெப்.2

போர்நிறுத்தத்தை மீறி, காஸாவில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய வான்தாக்குதலில் 29 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, காஸாவுக்குள் ஆயுதங்கள் கடத்தப்படுகின்றன என்றும், இதனாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது எனவும் இஸ்ரேல் விளக்கமளித்துள்ளது. எனினும், இந்தத் தாக்குதலையும், அதற்காகக் கூறப்பட்ட காரணங்களையும் ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ளது. (ம)

## மூன்று...

டுள்ளனர். இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் ஏ-9 வீதியில் நடந்துள்ளது. கொழும்பு நோக்கிப் பயணித்த காரின் சக்கரம் காற்றுப் போன நிலையில், கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே வந்த இரு சிறு ரக வாகனங்களுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சிக்கிய வாகனத்தில் ஒன்று தடம்புரண்டது. வாகனத்தில் பயணித்த பயணிகள் சிறு காலங்களுடன் பிரதேச மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டனர். மற்றைய வாகனத்தில் பயணித்தவர்களும் சிறு காணங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த விபத்துக் காரணமாக ஏ-9 வீதியின் ஊடான போக்குவரத்துச் சுமார் 30 நிமிடங்கள் தடைப்பட்டது. (அ-எ-113)

## மாகாணசபைத்...

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாணசபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு விரைவில் தீர்வுக் காணப்படும். அதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல தரப்பினருடன் கலந்துரையாடி முரண்பாடற்ற தீர்வை எடுக்க வேண்டும்.

ஆயினும் இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. டித்வா புயல் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் - என்றார். (அ-எ-இ)

## இலங்கைக்கு...

யில், இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவி இந்த முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு நிதியுதவியாக 400 கோடி இந்திய ரூபாவை இந்தியா இம்முறை ஒதுக்கியுள்ளது. இது கடந்த நிதியாண்டில் 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிதி இலங்கையில் முன்னெடுக்கப்படும் வளர்ச்சித் திட்டங்கள், மனிதாபிமான உதவிகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-எ-இ)

## வடக்கு...

தலை, வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களைக் கடந்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தது.

வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்ட வெற்றிக்கிண்ணம் பழைய பஸ் நிலையத்தில் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டது.

பிற்பகல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. அதன்பின்னர் வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயம், துரையப்பா விளையாட்டு அரங்கம், யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் யாழ்ப்பாணம் பொது நூலகம் ஆகிய இடங்களுக்குக் கிண்ணம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு ரசிகர்களை உற்சாகப்படுத்தவும், இலங்கை முழுவதும் கிரிக்கெட் உணர்வை மேம்படுத்தவும் இந்த கிண்ணச் சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-26-110)

## பஸ்...

துள்ளார். கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு மற்றும் அதைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக பஸ்களை இயக்குவதில பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

தேசிய பஸ் கட்டணக் கொள்கையின் படி, கொழும்பு பகுதிகளில் ஒரு லீற்றர் டீசலுக்கு 2.5 முதல் 3 கிலோமீற்றர் வரை பஸ்கள் பயணிக்க வேண்டும். தற்போது நிலவும் கடும் வாகன நெரிசலால், ஒரு லீற்றருக்கு 2 கிலோமீற்றருக்கும் குறைவான தூரமே பயணிக்கமுடிகின்றது. இந்த நட்டத்தை ஈடுகட்ட வேண்டுமானால், எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னதாக கட்டணத் திருத்தம் அவசியம். பிரதானமாக குறுகிய தூர சேவைகளுக்கான ஆரம்பக் கட்டணத்தை சுமார் 5 முதல் 6 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்று ஒன்றரை வருடங்கள் ஆகியும் பொதுப் போக்குவரத்து துறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. போக்குவரத்துத் துறை சார்ந்த உயர் அதிகாரிகளிடையே ஊழல் நிலவுகின்றது.

நாடெங்கிலும் சுமார் 14 ஆயிரம் வரையான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ள போதும், கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் சேவையைத் தொடர்வது தற்போது சாத்தியமற்ற ஒன்றாக மாறியுள்ளது - என்றார். (அ-எ-இ)

## மழை...

கூறப்பட்டுள்ளது. இலங்கையின் தென்பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாகத் தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் மழை கிடைத்துவருகின்றது. தற்போது கிடைத்துவரும் மழையால் வடக்கு மாகாணத்தின் பல குளங்கள் மீண்டும் வான்பாய ஆரம்பித்துள்ளன.

தற்போது மழை நீடிக்கும் நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் அறுவடை மற்றும் நெல் உலர விடும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் வானிலையைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்று யாழ்.பல்கலைக் கழக புவியியல் துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## கரிநாள்...

விடுத்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீட மாணவர் ஒன்றியத்தினர், முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியத்தினர் இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகளும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு போராட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையின் சுதந்திர தினமான எதிர்வரும் 4ஆம் திகதியை கரி நாளாக பிரகடனப்படுத்தி வடக்கு-கிழக்கில் போராட்டத்தை நடத்த தீர்மானித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சில தினங்களாக அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (அ-எ-26)

## உணவுதவிர்ப்பில்...

பேரும் தற்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 7ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, தங்கள் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்காத காரணத்தால், இன்று கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

7 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தங்களை உடனடியாக ஆசிரியர் சேவையில் உள்வாங்க வேண்டும் என்று கோரியே, இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். (அ-எ-இ)

## கிவுல்...

அரசியல் கட்சிகளும், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் 2011ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்து, அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருந்தது. தற்போது வரவு - செலவுத் திட்டத்தில் கிவுல் ஓயாவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் தமிழ் மக்களின் பூர்வீக எல்லைக் கிராமங்கள் கையகப்படுத்தப்படும் என்றும், தமிழ் மக்களின் வயல்நிலங்கள் பறிபோகும் அபாயம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியே இன்று போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. (அ-எ-26)

## அவசரகாலச்...

ளது என்று தெரிவிக்கப்படுகிறது. நிலவிய அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பொது பாதுகாப்பு மற்றும் நாட்டின் நல்வாழ்வைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசியமான விநியோகங்கள் மற்றும் சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு பொது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

அதேவேளை, 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அவசரகால ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பான கட்டளைகளைத் திருத்தம் செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட இந்தக் கட்டளைகள், கடந்த 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் திருத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதற்குரிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## தப்பியோடிய...

என்பன சேதமாகியுள்ளன. சாரதி வாகனத்தைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘டித்வா’ புயலால் பாதிக்கப்பட்ட

# 4 இலட்சத்துக்கு அதிகமான குடும்பங்களுக்கு நஷ்டஈடு!

## அரசாங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.2**

**நாட்டை உலுக்கிய ‘டித்வா’ புயலினால் பாதிக்கப்பட்ட 4 இலட்சத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் மக்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பணிகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், புயலினால் பாதிக்கப்பட்ட வீடுகளைத் துப்புரவு செய்வதற்கும் முதற்கட்டத் தேவைகளுக்காகவும் தலா 25,000 ரூபா வீதம் நஷ்டஈடு வழங்க 4,34,375 வீடுகள் அடையாளம் காணப்பட்டன. இதில் தற்போது வரை 97.5 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு, 4,23,914 குடும்பங்களுக்கு அந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், வீட்டு உபகரணங்களை இழந்த 1,63,509 குடும்பங்களுக்குத் தலா 50,000 ரூபா வழங்கும் திட்டத்தின்கீழ், 70 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு அதாவது 1,15,757 குடும்பங் களுக்கு இதுவரை இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தலா 15,000 ரூபா வழங்கும் பணிகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக வீடுகள் சேதமடைந்த விதம், ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வசிப்பதால் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் தகவல் தொடர்புத் துண்டிப்பு போன்ற சவால்களுக்கு மத்தியிலும் இந்த நிவாரணப்பணிகள் வெற்றிகரமாகமுன்னெடுக்கப் பட்டு வருகின்றன. அடையாளம் காணப்பட்ட எஞ்சிய அனைத்துப் பயனாளிகளுக்கும் அடுத்த சில நாள்களுக்குள் முழுமையான நஷ்டஈடு வழங்கி முடிக்கப்படும் - என்றார் (ச-இ)

# ‘டித்வா’ மீள்கட்டுமானத்தில் மலையக மக்கள் ஒதுக்கல்

## மனோகணேசன் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.2**

இலங்கையை உலுக்கிய டித்வா பேரழிவுக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களில், மலையகப் பெருந்தோட்டச் சமூகம் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது ஒரு வகையான "இன ஒதுக்கல்" எனச் சாடியுள்ள அவர், இதுகுறித்து இலங்கையிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் அந்ரே பிரான்சேயிடம் உத்தியோகபூர்வமாக முறையிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையக மக்கள் இந்தியப் பிரஜைகள் அல்ல, அவர்கள் இலங்கையின் குடிமக்கள். ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் 50 இலட்சம் ரூபா மதிப்பிலான வீடமைப்பு உரிமைகள் ஏன் பெருந்தோட்ட மக்களுக்கு மறுக்கப்படவேண்டும்? அவர்களை மாற்றான் தாய் பிள்ளைகளாக நடத்துவது ஏன்?

பாதிக்கப்பட்ட மலையக மக்களை இந்திய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கவனிப்பதாக அரசாங்கம் கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாதது. இந்திய உதவித்திட்டம் என்பது பேரழிவு நிகழாத பகுதிகளில் வழமையாகத் தொடர வேண்டிய ஒன்று. அது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கு மாற்றீடாக அமையமுடியாது.

பெருந்தோட்டக் காணிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. எனவே, சட்டரீதியான அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாதுகாப்பான காணிகளை அடையாளம் கண்டு அவற்றை மக்களுக்கு வழங்கவேண்டும்.

எனவே, ஒரு சமூகத்தை மட்டும் ஒதுக்கிவைக்கும் அரசாங்கத்தின் கொள்கையை ஐ.நா. தடுத்துநிறுத்த வேண்டும் - என்றார். (ச)

# சாரதிகளில் 60 சதவீதமானோர் போதைப்பொருளுக்கு அடிமை

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகளில் சுமார் 60 சதவீதமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என்று நெடுஞ்சாலைகள் மற் றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 2025ஆம் ஆண்டில் 2,700 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதுடன், அதில் 2,700 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 2,000 பேர் பாதசாரிகளாவர். அத்துடன், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்தவர்கள் எனப் பலர் உயிரிழந்துள்ளதுடன், உயிரிழந்தவர்களில் 53 சதவீதமானோர் ஆண்களாகும். இந்த விபத்துகளில் சுமார் 50 சதவீதமானவற்றுக்கு சாரதிகளே காரணமாகும். அவர்களில் பெரும்பாலானோர் மதுபானம் மற்றும் போதைப் பொருள் களைப் பயன்படுத்துபவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகையவர்களுக்கு இனி வரும் காலங்களில் முறையான பயிற்சியின் பின்னரே விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப் படும். அவ்வாறெனில் மாத்திரமே மீண்டும் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)



இயற்றாலை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கால்கோள் விழா கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் ஸ்ரீமோகன் தவசொரூபி தலைமையில் இடம்பெற்றது. பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வியைத் தொடர்வதற்காகக் கால் பதித்த புது முக மாணவர்களை இரண்டாம் தர மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவப்படுத்தி இன்முகத்துடன் வரவேற்றனர். (ச-159)

**ENGLISH CLASSES**
Zoom அல்லது தனியாகவும்
அல்லது குழுவாகவும்
வீடு வந்து கற்பிக்கப்படும்.
Students, Workers
and for
University students
*Grammar *Spoken
T.P: 077 33 14 608
(CS31126) A



கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மாணவர்களுக்கு நற்குண முன்னேற்ற அமைப்பால், புத்தகப்பைகள் மற்றும் கல்விக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-17)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.02.1938 | 01.02.2026 |

**பஞ்சலிங்கம்**
**சர்வேஸ்வரி (பஞ்சு மாமி)**

மாவிட்டபுரம் வீமன்காமத்தை பிறப்பிடமாகவும், கரந்தன் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பஞ்சலிங்கம் சர்வேஸ்வரி 01.02.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 50 11 957
077 740 8735

(CS31134) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.